**தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூலை 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பரீட்சை ஆணையாளரின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2022 திசெம்பர் 13 திகதிய 2022/05 இலக்கங் கொண்ட அரச கணக்கு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த தேவைப்பாட்டில் இருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழிகாட்டலின் பந்தி 7.9 இன் பிரகாரம் நிதியாண்டு இறுதியில் அறிக்கையிடும் நிறுவனத்தினால் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 2,681,919 இற்கான காசு மீதி நிதி நிலைமைக் கூற்றில் பணம் மற்றும் பணத்துடன் சமமானவைகளின் மீதியுடன் உட்படுத்தப்படக்கூடாது எனினும் அப் பெறுமதி உட்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆண்டிற்கான கணக்குகள் சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | அரச கணக்கு வழிகாட்டலின் பிரகாரம் கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் ரூபா 402,886 இற்கான VAT கட்டுப்பாடு என்ற பெயரில் மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. | திணைக்களத்தில் VAT கட்டுப்பாட்டுக் கணக்கொன்று செயற்படுவதினால் அதனை நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் நிதி நிலைமை கூற்றில் உட்படுத்த வேண்டிய தகவல்கள் மாத்திரம் உட்படுத்த வேண்டும். |
| (இ) | வழிகாட்டலின் பந்தி 7.8 இன் பிரகாரம் முற்பணக் கணக்குகளின் பெறுமதிகளில் இருந்து வைப்புக் கணக்குகளின் பெறுமதியை கழித்து | மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் காரணமாக இந்த சிக்கல் ஏற்பட்டிருந்ததுடன், 2023 | அரச கணக்கு வழிகாட்டல் 05/2022 பிரகாரம் கணக்குகள் தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க |

| | | | |
|---|---|---|---|
| | நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் கீழ் காணப்படும் திறைசேரிக்கு தேறிய சொத்துக்களின் பெறுமதி கணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | ஆண்டிற்கான கணக்குகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வேண்டும். |
| (இ) | வழிகாட்டலின் பந்தி 7.7 இன் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்கு சமமான பெறுமதி ஒன்று நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் கீழ் ஒதுக்கம் என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் நிதி நிலைமை கூற்றில் (ஏசீஏ-பீ இல்) ரூபா 89,119,276 தொகைக்கான வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கூட்டிக் காட்டப்பட்டமையால் அதற்கு சமமான தொகையினால் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண கணக்கு மீதியில் வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2023 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்றின் வாடகை மற்றும் வேலைகள் முற்பணக் கணக்கின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அரச கணக்கு வழிகாட்டல் 05/2022 பிரகாரம் கணக்குகள் தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடு

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் திணைக்கள ஏடுகளின் படி ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் திறைசேரி ஏடுகளின் படி ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளில் இருந்து ரூபா 332,250 இனால் வித்தியாசப்பட்டு இருந்ததுடன், நீண்ட காலமாக காணப்படும் இந்த மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ரூபா 332,249.20 வித்தியாசம் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட வித்தியாசம் ஒன்று அல்லாததுடன் பழைய கோப்புக்கள் புத்தகங்களை பரிசோதனை செய்து பார்த்த போது இது 2000 ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டிருந்த வித்தியாசம் ஒன்று என இனங்காணப்பட்டது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வித்தியாசத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### (ஆ) வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 6000-0-0-016-0-120 கொண்ட வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி திணைக்கள ஏடுகளின் படி ரூபா 16,574,196 தொகையாக காணப்பட்ட போதிலும் ACA 4 படிவத்தில் அது ரூபா 1,657,419 தொகை என காட்டப்பட்டிருந்தது. அதன்படி, வைப்புக் கணக்குகளில் ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 103,464,394 தொகை எனினும், ACA 4 படிவத்தில் அது ரூபா 88,547,618 தொகை என ரூபா 14,916,776 தொகை குறைவாக காணப்பட்டது. | தவறுதலாக ACA 04 படிவத்தில் 6000-0-016-0-120-0 கொண்ட வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 165,719.87 என காட்டப்பட்டிருந்த போதிலும் சரியான மீதி ரூபா 16,574,196 தொகையாக இருக்க வேண்டும். எதிர் காலத்தில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கவனமாக இருப்பதற்கு குறித்துக்கொண்டேன். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது போதிய கவனத்துடன் சரியான தகவல்கள் சமர்ப்பிக்க வேண்டும். |

### (இ) கட்டுநிதி மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்கள ஏடுகளின் படி கட்டுநிதி மீதியொன்று காணப்படாத போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 2,681,919 தொகை உட்படுத்தப்பட்டிருந்தது. | திறைசேரிக்கு அனுப்பப்பட்ட பணம் தவறுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் கணக்குகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அரச கணக்கு வழிகாட்டல் 05/2022 பிரகாரம் கணக்குகள் தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

### (ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் செலவு விடயம் 1701 இற்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்காததுடன், நிதிப் பிரமாணம் 66 மாற்றத்தின் மூலம் அந்த செலவு விடயத்திற்கு ரூபா 4,150,000 இற்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தது. இந்த செலவு விடயத்திலிருந்து நட்டங்கள் மற்றும் பதிவழித்தலின் கீழ் ரூபா 4,129,525 தொகை ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | திறைசேரி பலவின முற்பணக் கணக்கு (7000/0/0/25003/420) – 2002 / 2007 நெல் கொள்வனவின் போது ஏற்பட்டிருந்த நட்டம் நி.பி. 109 இன் மூலம் பதிவழிப்பதற்காக PFD/RED/WO இலக்கம் கொண்ட 2022.01.24 திகதிய பொது 285 படிவத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்குரிய தகவல்கள் FC/6(1)/4/1 அரிசி என்ற கோவையில் உள்ளடங்கியுள்ளது. | பதிவழிப்பதற்குரிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஜுலை 28 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 2.2(அ) இன் மூலம் 2021 ஜுலை 01 திகதியில் உள்ளவாறான பதவியணியை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆண்டிற்காக சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் ஏனைய படிகள் ஒவ்வொரு ஆட்களுமாக வெவ்வேறாக கணிக்கப்பட வேண்டும் எனவும், 2022 ஆண்டின் போது புதிய ஆட்சேர்ப்பு ஊக்கமிழக்கச் செய்யப்பட்டமையால் அதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையின் காரணத்தினால், | உத்தியோகத்தர்கள் பதிலாட்கள் இன்றி இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தமையால் அவ்வாறு 1001, 1003 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாத செலவு விடயங்களுக்காக அந்த மீதித் தொகை மாற்றப்பட்டதெனவும். | யதார்த்தமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| | • சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் செலவு விடயம் 1001 இன் கீழ் ரூபா 3,000,000 தொகை அதாவது 9 சதவீதம் நி.பி. 66 இன் மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், அந்த மாற்றங்கள் மேற்கொண்ட பின்னர் செலவுகள் மேற்கொண்ட பின்னரும் ரூபா 1,484,341 தொகை அதாவது திருத்திய மதிப்பீட்டின் 5 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் பதிலாட்கள் இன்றி இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தமையால் அவ்வாறு 1001, 1003 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாத செலவு விடயங்களுக்காக அந்த மீதித் தொகை மாற்றப்பட்டதெனவும். | யதார்த்தமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| | • ஏனைய படிகள் 1003 செலவு விடயத்தில் இருந்து ரூபா 1,100,000 தொகை அதாவது 6.9 சதவீதம் நிதிப் பிரமாணம் 66 மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், அந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் செலவுகள் மேற்கொண்ட பின்னரும் ரூபா 485,905 தொகை அதாவது திருத்திய மதிப்பீட்டில் 3.26 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் பதிலாட்கள் இன்றி இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தமையால் அவ்வாறு 1001, 1003 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாத செலவு விடயங்களுக்காக அந்த மீதித் தொகை மாற்றப்பட்டதெனவும். | யதார்த்தமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 13 திகதிய 05/2022 இலக்கம் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலில் 3.4 பந்தியின் பிரகாரம் செலவு விடயமொன்றின் மொத்த தேறிய ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே வித்தியாசம் அந்த செலவு விடயத்தின் தேறிய ஏற்பாடுகளில் 5 சதவீதம் அல்லது ரூபா 10,000 ஆகிய இரண்டில் ஏதேனும் கூடிய தொகையினால் அதிகரிப்பின் அந்த வித்தியாசத்திற்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 09 செலவு விடயங்களுக்குரிய வித்தியாசத்திற்கான காரணங்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | தவறுதலாக சேமிப்புகளுக்கான காரணம் காட்டப்படவில்லை. | சரியாக கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

## 2.2 பொறுப்புகள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவு விடயங்கள் தொடர்பாக சேமிப்பை மிகைத்து ரூபா 4,122,969 இற்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொண்டிருந்தது. | அத்தியவசிய செலவுகளுக்காக அவ்வாறு ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்தியிருந்ததுடன், எதிர் காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு குறித்துக்கொண்டேன். | சேமிப்பை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகுதல் மேற்கொள்ளக் கூடாது. |
| (ஆ) | ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 99,800 தொகைக்கான 2 பொறுப்புகள் 2023 மார்ச் 30 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | இந்திய நிவாரண உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய உறுதிச் சீட்டாக காணப்பட்டமையால் இதுவரை கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | பொறுப்புக்களுக்கு அணுகும் போது செலவுத் தலைப்பு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 இலக்கம் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி xii இன் பிரகாரம் அனைத்து நலன்புரி மற்றும் நிவாரண உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் மீண்டும் மீளாய்வு செய்து அவை அத்தியவசியமாக கிடைக்க வேண்டிய குறைந்த வருமானமுடையோருக்கு அல்லது அத்தியவசிய நலன் பெறுவோருக்கு மாத்திரம் வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக | திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களம் இதற்காக ரூபா 20 மில்லியன் தொகை ஒன்று மாத்திரம் வழங்கியிருந்தது. அதன்படி, மேலும் ரூபா 10 மில்லியன் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது. செலுத்தப்பட்ட ரூபா 20 மில்லியன் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு குறித்துக்கொண்டேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கவனம் செலுத்தி சிறிய மற்றும் மத்திய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களை முன்னேற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 50,000,000 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 300-1-1-4-2506 செலவு விடயத்தின் கீழ் மேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கு ரூபா 30,000,000 இற்கான பொறுப்பொன்று காட்டப்பட்டிருந்ததுடன், 2022 ஆண்டில் அது தொடர்பாக உடன்படிக்கையொன்று மேற்கொண்டு அல்லது அது தொடர்பாக செயற்பாட்டு இருக்காத போதிலும், 2023 பெப்ரவரி மாதத்தில் ரூபா 20,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (i) (பின்னிணைப்பு iv) இல் நிதிப் பிரமாணம் 94(2) மற்றும் (3) ஆகிய பிரகாரம் பொறுப்புக்கள் மேற்கொண்டிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக் கூற்றில் ரூபா 216,039 இற்கான ஈடுபாட்டுப் பொறுப்பொன்று மாத்திரம் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இணைப்பு (iii) இல் அடங்கிய ரூபா 4,469,507 இற்கான பொறுப்புக்களும் உட்படுத்தியிருந்த காரணத்தினால் நி.பி. 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் பொறுப்புக்களுக்கு அணுகியிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக் கூற்றில் ரூபா 4,253,468 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (i) இல் நி.பி. 94(2)(3) இன் பிரகாரம் வருடாந்த மீண்டுவரும் வழங்கல்கள் மற்றும் சேவைகள் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (உ) | இந்திய உதவியை வினியோகித்தல் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் செலவுகள் ஏனைய செலவுத் தலைப்புகளாகிய வர்த்தக அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த | இந்தச் செலவுகள் மிகவும் விரைவாக செலுத்தப்பட வேண்டியிருந்தமையால் 300-1-1-0-1002 செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. எதிர் காலத்தில் செலவுகள் மேற்கொள்ளும் போது கவனமாக இருப்பதற்காக | செலவுகள் மேற்கொள்ளும் போது செலவுத் தலைப்புகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும், ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் அந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய ரூபா 173,883 தொகை மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளம் 300-1-1-0-1002 கொண்ட உணவுத் திணைக்கள செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்துக்கொண்டேன். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்

இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் கூட்டிணைப்பின் கீழ் மனித நேய உதவி என இலங்கைக்கு வழங்கப்படும் 40,000 மெட்ரிக் தொன் அரிசி மற்றும் 500 மெட்ரிக் தொன் பால்மா மற்றும 50 மெற்றிக் தொன் மருந்து வகைகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் 03 கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. இந்த 03 கட்டங்களிலும் துறைமுகத்திலிருந்து பண்டங்கள் விடுவித்தல் முதல் உரிய மாவட்ட செயலகங்களுக்கு உணவுப் பண்டங்களை வினியோகிக்கும் கருமம் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இங்கு முதலாம் கட்டத்திற்காக 9,000 மெட்ரிக் தொன் அரிசி மற்றும் 50 மெட்ரிக் தொன் பால்மா தொகையும் இரண்டாம் கட்டத்திற்காக 14643.95 மெற்றிக் தொன் அரிசி மற்றும் 250 மெற்றிக் தொன் பால் மாவும், மூன்றாம் கட்டத்திற்காக 16,356.5 மெட்ரிக் தொன் அரிசி மற்றும் 200 மெட்ரிக் தொன் பால்மா ஆக வழங்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) நிவாரண உதவி இருப்பினை களஞ்சியப்படுத்தல் மற்றும் களஞ்சியங்களை வாடகைக்கு எடுத்தல்** | | |
| (i) இந்திய உதவிகளை வினியோகித்தலை பௌதீக பரிசோதனைக்கு ஆளாக்கிய தினத்தில் மருதானை புகையிரக் களஞ்சியங்கள் இரண்டிலும் பாரிய இட வசதிகள் மீதியாக காணப்பட்ட போதிலும், புகையிரதத்தில் எடுத்துச் செல்வதற்காக திட்டமிடப்பட்ட அரிசி இருப்பினை மருதானை களஞ்சியத்தில் வைக்காமல் ஒருகொடவத்த களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டமையால் மீண்டும் மருதானை களஞ்சியத்திற்கு எடுத்து வருவதற்காக 2022 ஜுலை 04 திகதி முதல் ஜுலை 18 திகதி வரையான காலப் பகுதியில் ரூபா 1,631,700 இற்கான மேலதிக போக்குவரத்துச் செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் உங்கள் அறிவுரையின் படி செயற்படுவேன். | அரசாங்கத்திற்கு மிகவும் சிக்கனமான முறையில் சேவைகள் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரிசிப் பொதிகள் உடைந்திருந்தமையால் ஒருகொடவத்த மற்றும் மருதானை களஞ்சியங்களில் நாளாந்தம் சேகரிக்கப்பட்ட அரிசியும் மீண்டும் துப்புறவு செய்யப்பட்டு பொதி செய்யப்பட்டு வினியோகிக்கப்படுகின்றன என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக போதிளவு தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், பெருக்கிய அரிசியை பொதிகளை தயாரித்தல் களஞ்சியத்தை துப்புறவு செய்தல் ஆகிய விடயங்களுக்காக 2022 ஜூன் 14 திகதி முதல் 2022 ஜூலை 16 திகதி வரையான காலப் பகுதியில் ரூபா 101,320 இற்கான செலவொன்றும் உடைந்த அரிசை சேகரிப்பதற்காக உறைகள் கொள்வனவு செய்வதற்காக 2022 ஜூன் 03 திகதி முதல் 2022 செப்தம்பர் 12 திகதி வரையான காலப் பகுதியில் ரூபா 787,520 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உங்களால் சுட்டிக் காட்டபட்டவாறு எச்.எம். மேன்பவர் நிறுவனத்திற்கு உடைந்த அரிசி பொதிகளை தயாரித்தல், புகையிரத களஞ்சியத்தை துப்புறவு செய்தல் ஆகிய அலுவல்களுக்காக ரூபா 101,320 தொகையொன்றும் உடைந்த அரிசிகளை சேகரிப்பதற்காக ரூபா 787,520 இற்கான தொகையொன்றும் மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கின்றேன். | சேதங்களை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) இருப்புக்கள் சேதமடைதல் மற்றும் குறைவுகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | கட்டம் I, II மற்றும் III கீழ் ஏற்றுக் கொள்ளல் பட்டியலின் படி கிடைத்திருந்த அரிச எண்ணிக்கை 40,000,000 கிலோ கிராம்கள் தொகை எனினும் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை 39,960,350 தொகையாக காணப்பட்டமையால் 39,650 கிலோகிராம்கள் குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. அதே போல் ஒருகொடவத்த மற்றும் மருதானை களஞ்சியங்களுக்கு கிடைத்திருந்த அரிசி எண்ணிக்கை 39,957,650 கிலோகிராம்களாக காணப்பட்டமையால் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை மற்றும் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த அரிசி எண்ணிக்கையிடையே 2700 கிலோகிராமிற்கான குறைவு ஒன்று | ஏற்று பொருள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அரிசி எண்ணிக்கை 40,000,000 கிலோகிராம் எனினும் அரிசிப் பைகள் உடைந்து கப்பலினுள் பரவியிருந்த காரணத்தினால் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை துறைமுகப் பதிவேட்டின் படி 39,960,350 கிலோகிராம்களாக இருந்தது. துறைமுகத்தில் இருந்து மருதானை மற்றும் ஒருகொடவத்த களஞ்சியங்களுக்கு போக்குவரத்து செய்யும் போது இந்த அரசி பைகளை லொறி வண்டிகளுக்கு ஏற்றும் போது மற்றும் இறக்கும் போது பைகள் உடைந்து பரவியிருத்தல் ஆகியவற்றினால் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த எண்ணிக்கை களஞ்சியப் பதிவேட்டின் படி 39,957,650 கிலோகிராம்களாக காணப்பட்டது. | இருப்புக்கள் விரயமாதலை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. மேலும் மூன்று கட்டங்களிலும் கப்பலிலிருந்து பெருக்கிய அரிசி 42,300 கிலோகிராம் மீண்டும் சுத்தம் செய்யப்பட்டு வினியோகிக்கும் அடிப்படையில் காணப்பட்டது. மூன்று கட்டங்களிலும் ஏற்று பொருள் பட்டியல் மற்றும் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பால்மா எண்ணிக்கைகள் வித்தியாசப்பட்டதுடன் பற்றாக்குறை 6,840 கிலோகிராம்களாக இருந்தது. | | |
| (ii) கட்டம் I, II மற்றும் III கீழ் மாவட்ட செயலங்கள்/ பிரதேச செயலங்களுக்கு வினியோகிக்கப்பட்ட நிவாரண உதவிகள் மற்றும் அந்த அலுவலகங்களுக்கு கிடைத்திருந்த நிவாரண உதவிகளுக்கிடையே அரிசி 10,910 கிலோகிராமும் பால்மா 160 கி.கி. இற்கான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. | உணவுத் திணைக்களத்தில் வரையறுக்கப்பட்ட பதவியணியினரை ஈடுபடுத்தி இரவு பகல் இரு நேரமும் கடமைகள் நிறைவேற்றப்பட்டதுடன், இந்த வித்தியாசத்திற்கான காரணம் மாவட்ட செயலாளர்களினால் பெற்றுக் கொள்ளும் போது கணித்தல் மேற்கொள்ளும் போது வழுக்கள் ஏற்படக் கூடியதாக இருந்ததுடன், அந்த வழுக்கள் சுமார் ஆயிரத்திற்கு மூன்று என அவதானிக்கப்பட்டதுடன் குறைவடைதல் வழு ஒன்று அல்ல மனித கணிப்பு தவறு ஒன்றாக இருக்கக் கூடும் என. எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு குறித்துக் கொண்டேன். | கணித்தல் வழுவினை குறைத்துக் கொள்வதற்கும் இணக்கஞ் செய்தல் மேற்கொண்டு சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) வினியோகிக்கும் போது இருப்பு மிகைகள் ஏற்படுதல்** | | |
| போக்குவரத்து செய்யப்பட்ட இருப்பை விட கூடிய எண்ணிக்கை கிடைத்திருந்ததென மாவட்ட செயலாளர் உறுதிப்படுத்தி இருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அதன் படி மிகையாக கிடைத்திருந்த அரிசி 4150 கி.கி. தொகையாக காணப்பட்டது. அதன் படி முறையான மேற்பார்வை மற்றும் சோதனையின் கீழ் வினியோகித்தல் மேற்கொள்ளப்பட்டனவா என கணக்காய்விற்கு சிக்கல் தன்மையாக இருந்தது. | பண்டங்களை ஒப்படைத்தல் மற்றும் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக முறையான செய்முறையாவது மாவட்ட செயலாளர் அல்லது பிரதிநிதி ஒருவரை கொழும்புக்கு அழைத்து குறிப்பிட்ட உத்தியோகத்தரின் முன்னிலையில் பண்டங்களை வண்டிக்கு ஏற்றி அவருக்கு ஒப்படைத்தலாகும். எனினும் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடின் காரணமாக அரச கொள்கைகளின் படி அரச உத்தியோகத்தர்கள் நடமாடும் வரையறுக்கப்பட்ட காரணத்தினால் அரச உத்தியோகத்தர்களை கொழும்புக்கு அழைத்து பண்டங்களை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்படாததுடன், அது | நிவாரண உதவி வினியோகிக்கும் போது முறையான மேற்பார்வை மற்றும் சோதனையின் கீழ் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அரச செலவினத்தை குறைக்கும் செயற்பாடு மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிவிக்கின்றேன். மாவட்ட செயலாளர்களினால் புகையிரத திணைக்களத்தின் மூலம் நேரடியாக பண்டங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| **(ஈ) வினியோகச் செலவுகள்** | | |
| (i) மொனராகலை மாவட்ட செயலகத்திற்கு 05 மெற்றிக் தொன் அரிசி மற்றும் 7.5 மெற்றிக தொன் பால் மா போக்குவரத்து செய்யபட்டிருந்த போதிலும் அதற்கான போக்குவரத்து செலவு கணிக்கும் போது 20 மெற்றிக் தொன் அரிசி மற்றும் 25 மெற்றிக் தொன் பால்மா வினியோகிக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டு போக்குவரத்து செலவு கணிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 298,024 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | செலவுகளை சான்றுபடுத்தும் போது முறையான மேற்பார்வை ஒன்று செய்யப்பட வேண்டும். |
| (ii) ஒரு மெற்றிக் தொன் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு போக்குவரத்து செய்வதற்காக ரூபா 35 தொகை அறவீடு செய்வதற்கு பெறுகை தீர்மானத்திற்கு அணுகி இருந்ததுடன் பால்மா போக்குவரத்தின் போது போக்குவரத்துச் செய்யப்பட்ட மெற்றிக் தொன் எண்ணிக்கையை விட கூடுதலாக அதாவது லொறியின் கொள்திறனுக்காக செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாதிரியின் படி மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த போக்குவரத்து கட்டணம் ரூபா 771,308 தொகையாகும். | உணவு ஆணையாளரின் அங்கீகாரத்தின் மீது லொறியின் கொள்திறன் மீது இந்த போக்குவரத்துக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகை தீர்மானத்தின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) தெரிவு செய்யப்பட்ட தனியார் கம்பனியினால் வினியோகிப்பதற்காக போக்குவரத்து செலவு அவர்களால் மேற்கொள்வதற்கு இணங்கியிருந்த போதிலும் ஏனைய தனியார் போக்குவரத்து சேவைகள் மூலம் வினியோகச் சேவைகள் பெற்றுக் கொண்டமையால் ரூபா 457,494 தொகை மிகையாக பணம் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | பெறுகை செய்முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனங்களின் மூலம் மாவட்டங்களுக்கு வினியோக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது. நிலவிய சூழலின் படி களஞ்சியங்களில் இடவசதிகள் தொடர்பான சிக்கலை தீர்த்துக் கொள்ளலும், உணவுப் பொருட்களை விரைவாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பும் தேவைப்பாடு ஏற்பட்டமையாலும், உணவு ஆணையாளரின் கோரிக்கை மீது இன்டர்மெரில் நிறுவனத்தின் மூலம் கழுத்துறை மாவட்டத்தில் நிவாரண உதவிகள் வினியோகிக்கப்பட்டு இருந்தது. எனினும் பெறுகை செய்முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் மூலம் ஏனைய மாவட்டங்களுக்கான போக்குவரத்து அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது. | குறைந்த கிரயமொன்றின் கீழ் செலவுகள் மேற்கொள்ள வேண்டும். |
| (iv) இசைவுச் செலவுகள் தொடர்பாக விலை அழைப்பின் படி இணங்கி இருந்த அலகு கிரய கணிப்பு தொடர்பாக செலவு விடயங்களுக்கு மேலதிகமாக ஏனைய செலவுகள் என கட்டம் I,II மற்றும் III இற்காக ரூபா 1,429,828 இற்கான செலவொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி அதில் அடங்கியிருந்த ரூபா 540,979 இற்கான துறைமுகக் கட்டணம் ரூபா 729,532 இற்கான சுங்கத் தீர்வைக்கு மேலதிகமாக உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் துறைமுகக் கட்டணம் மற்றும் சுங்கத் தீர்வை என முறையே ரூபா 9,495,008 தொகை மற்றும் ரூபா 9,651,650 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் கிடைத்திருக்கவில்லை. | விலை அழைப்பின் படி இணங்கியிருந்த கூறுவிலைகளின் படி கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அகக் கணக்காய்வு கடமையினை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான செய்முறை ஒன்று காணப்படுகின்றது என உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் பந்தி 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பதில் கடமை அடிப்படையிலேனும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்து கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டேன். | அதிகார சட்டத்தின் தேவைப்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | | |
| (i) | நிதிப் பிரமாணம் 138(1) | 1,041,797 | உறுதிச் சீட்டொன்று சான்றுபடுத்தும் போது உரிய தலைப்பு, நிகழ்ச்சித் திட்டம், கருத்திட்டம், கருத் திட்டத்தின் வகுப்பு ஆகியன சரியாக குறிப்பிட்ட கணக்கிற்கு செலவு பொறுப்பொன்று ஆகின்றது என உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சான்றுபடுத்தாமல் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு இந்திய உதவி வினியோகத்திற்கான | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இந்திய நிவாரண உதவி வினியோகித்தலில் ஈடுபடல் மற்றும் மிகவும் வரையறுக்கப்பட்ட பதவியணி ஒன்றின் மூலம் இந்த விடயத்தை மிகவும் விரைவாக நிறைவேற்றிக் கொண்டமையால் அவ்வாறாக மேலதிக நேரம் உணவுத் திணைக்களத்தின் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மேலதிக நேர வேலை கொடுப்பனவுக்காக சந்தர்ப்பம் காணாமல் இருந்த போதிலும் உணவு ஆணையாளரினால் (300) செலவுத் தலைப்பில் செலவு விடயம் 1002 கீழ் மே, ஜூன் மற்றும் ஜூலை ஆகிய மூன்று மாதங்களுக்காக ரூபா 1,041,797 தொகை மேலதிக நேர வேலைக்காக கொடுப்பனவுக்காக செய்யப்பட்டிருந்தது. | செலவுத் தலைப்பின் மூலம் 300-1-1-1002 செலவு விடத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டது என அறிவிக்கின்றேன். எதிர்காலத்தில் மேலதிக நேர கொடுப்பனவுகளின் போது உங்கள் ஆலோசனையின் படி செயற்படுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | 895,000 | நிமித்தத் துணைக் கட்டுநிதி பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்க முடியும் எனினும் ரூபா 895,000 தொகை பெறுமதியான முற்பணத் தொகையொன்று பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் (நிறைவேற்று உத்தியோகத்தர்கள்) என கடமையாற்றுவது உணவு ஆணையாளர் பிரதான கணக்காளர் மாத்திரமாக காணப்படுவதால் இந்தியாவில் இருந்து மற்றும் சீனாவில் இருந்து இந்த நாட்டிற்கு கிடைத்த வெகுமதிகள் செயற்திறனுடன் மற்றும் விரைவாக வழங்குவதற்காக ஒவ்வொரு நிலையத்திற்கும் இணைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு முற்பணத் தொகைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொது வைப்புகளுக்காக உரிய ரூபா 110,095,143 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், அந்த மீதியில் 2 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 54,930,690 தொகை மற்றும் 10 வருடங்களை விட மிகையான ரூபா 25,448,939 இற்கான மீதியொன்று காணப்பட்டது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த மீதிகளை பரிசோதனை செய்து நி.பி. 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொண்டேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2.7 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேறப்படாத பெறுவனவுகள் ரூபா 887,592 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் 07 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 55,000 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தேறப்படாத பெறுவனவுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இரண்டு வருடங்களை விட மிகையான இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 36,650 தொகையும், ஒரு வருடத்திற்கு மிகையான ரூபா 31,775 தொகையும் மற்றும் ஒரு மாதத்திற்கு மிகையான ரூபா 1,353,885 தொகையும் ஆக மொத்தம் ரூபா 1,442,310 தொகைக்கான இனங்காணப்படாத பெறுவனவுகள் காணப்பட்டதுடன், அந்தப் பெறுவனவுகளை இனங்காண்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இனங்காணப்படாத பெறுவனவுகள் தாமதமின்றி உறுதிப்படுத்தி கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 12 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அடங்க வேண்டிய வருடாந்த தொழிற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் மற்றும உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் அடங்கியிருக்கவில்லை. | • எதிர்காலத்தில் செயல் நடவடிக்கை திட்டத்துடன் கட்டுநிதி திட்டமும் சமர்ப்பிக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன்.<br>• உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று எமது திணைக்களத்தில் தற்போது நிறுவப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டமிடுவதற்காக பொறுப்பாக இருக்க வேண்டும். |

### 3.2 பணிப் பொறுப்புகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தகவல் தொழிநுட்ப கிளையின் மூலம் பொது மக்களுக்க நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் வழங்கும் குறிக்கோளுடன் திணைக்களத்தின் இணையப் பக்கம் நாளதுவரை ஆக்கல் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்கண்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதிவரை திணைக்களத்தின் இணையப் பக்கம் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் இணைய தளம் நாளதுவரை ஆக்கல் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் அதனை விரைவாக உரிய நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | இணையத்தின் பக்கம் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திணைக்களத்தின் பிரதான கருமம் என காட்டப்பட்டுள்ள 8000 மெற்றிக் தொன் விஷேட அரிசி ஒதுக்கமொன்று பேணிச் செல்லல் மற்றும் 100,000 மெற்றிக் தொன் பாதுகாப்பு அரிசி ஒதுக்கம் ஒன்று பேணிச் செல்வதற்காக 2022 ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் | பெறுகைத் திட்டத்தின் முன்னேற்றத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக முன்னேற்றம் தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் செயலாற்றுகை அறிக்கையின் சரியான தரவுகள் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் 300-1-1-3-2506 மற்றும் 300-1-1-4-2506 ஆகிய செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டு இருந்த ரூபா 100,000,000 இற்கான மொத்த ஏற்பாடுகளும் வருட இறுதியிலும் சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் செயலாற்றுகை அறிக்கையில் 300-1-1-4-2506 ஆகிய செலவு விடயத்தின் கீழ் காணப்பட்ட செயலாற்றுகை சுட்டி கீழ் காணப்படும் சந்தையின் அரிசிக்கு நிறைவாக இருப்பதற்காக சிறு மற்றும் மத்திய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் அரிசி உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை மேற்பார்வை செய்வதன் மூலம் சந்தையில் அரிசி நிறைவை பேணிச் செல்வதன் மூலம் எதிர்பார்த்த வெளியீட்டின் விளைவு ஒன்று என உள்ளவாறான வெளியீடு 75-89 இடைப்பட்ட சதவீத வீச்சில் காணப்பட்டதுடன் பெறுகைத் திட்டத்தின் முன்னேற்றத்தின் கீழ் நூறு சதவீதம் என காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | திணைக்களத்தின் வளங்கள் சிறந்த முகாமைத்துவம் செய்வதற்காக உரிய தரப்பினர்களுடன் கூட்டிணைந்து செயற்படல் களஞ்சியங்கள் மற்றும் வீடுகள் வாடகைக்கு வழங்கி அரச வருமானத்திற்கு பங்களிப்பு செய்தல் 100 சதவீதம் முதல் 90 சதவீதத்திற்கு இடைப்பட்ட மட்டம் என இனங்கண்டு இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் களஞ்சிய வாடகை ரூபா 95,448,000 தொகை மற்றும் நிலுவை வீட்டு வாடகை ரூபா 8,763,133 தொகை காணப்பட்டது. | நிலுவை களஞ்சிய வாடகை மற்றும் நிலுவை வீட்டு வாடகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கின்றேன். | நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஜூன் 26 முதல் 2019 திசெம்பர் 26 வரை 06 மாத ஒப்பந்த காலத்திற்கு தம்புள்ள உஷ்ண கட்டுப்பாட்டு களஞ்சிய தொகுதி நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 3 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2022 ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் 2022 ஏப்ரல் 30 திகதி வேலை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அது முக்கியத்துவ அலுவல்கள் ஒன்றெனவும் குறிப்பிட்டு ரூபா 625 மில்லியன் தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆண்டு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் அதற்காக உள்நாட்டு நிதியம், வெளிநாட்டு மானியம் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு சார்ந்த கிரயம் செலவு விடயம் 2104 இன் கீழ் ரூபா 246,000,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு நிதியம் மற்றும் வெளிநாட்டு மானியத்தின் கீழான காணப்பட்ட ரூபா 205,400,000 தேறிய ஏற்பாடுகள் 100% உம் வெளிநாட்டு நிதியளிப்பு சார்ந்த கிரயம் தொடர்பாக தேறிய ஏற்பாடுகளில் 99% அதாவது ரூபா 39,128,224 தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு காணப்பட்ட போதிலும் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறுகை முன்னேற்றத்தின் கீழ் 80 சதவீத முன்னேற்றம் ஒன்று காட்டப்பட்டிருந்தது. | தொழிநுட்ப சிக்கல்கள் காரணமாக அவ்வாறு செயற்திட்டம் தாமதம் ஆகியிருந்ததுடன், 2023 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்திற்குரிய 2022.12.31 திகதியில் உள்ளவாறான பெறுகை முன்னேற்றத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக முன்னேற்றம் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

### 3.5 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 12.2 தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இன் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் 03 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதி செயலாற்றல் கூற்று, நிதி நிலைமைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், 04 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு தயாரித்திருக்கவில்லை. | தவறுதலாக 2022 ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் வரைபு வருடாந்த நிதிக் கூற்றுடன் சமர்ப்பித்திருக்காததுடன், எதிர் காலத்தில் அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 இற்கு இணங்க நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமாக 11 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், 09 வாகனங்கள் மாத்திரம் ஸிகாஸ் சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்தது. | தவறுதலாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் WY – 9165 இலக்க மோட்டார் சைக்கிள் மற்றும் PG – 9165 இலக்கம் கொண்ட கப் வண்டி உட்படுத்தப்பட்டிருக்காததுடன் அவற்றை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான சொத்துக்கள் தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன், அந்த வாகனங்கள் தொடர்பாக 2020 ஒக்தோபர் 02 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2020 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்கள் அகற்றுதல் அலுவல்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | பயன்படுத்தப்படாத வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு இணங்க 15 மாவட்டங்களில் திணைக்களத்துக்கு சொந்தமாக காணப்படும் 28 காணிகள் மற்றும் கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழு உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லல் மற்றும் ஓய்வு பெறல் காரணமாக விளகியயிருந்தமையால் குறிப்பிட்ட கடமை அலுவல்கள் மிக விரைவில் பூர்த்தி செய்வதற்காக குறித்துக்கொண்டேன். | சொத்துக்கள் அனைத்தையும் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) தானியகம வீட்டுத் தொகுதி தொடர்பான பரிசோதனைகள்** | | |
| (i) 366 வீடுகளைக் கொண்ட வீட்டுத் தொகுதியொன்றென தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு 1981 நவம்பர் 21 திகதி உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சிற்கு உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருந்த இந்த தானியகம வீட்டுத் தொகுதியின் காணி கணக்காய்வுத் திகதி வரை திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவாக காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேற்கூறிய 366 வீடுகளில் 26 வீடுகள் சிதைவடைந்த நிலைமையில் காணப்பட்டதுடன், அந்த வீடுகளில் 09 வீடுகள் 10 வருடங்களுக்கு மிகையான காலம் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட போதிலும், திருத்த வேலைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | 26 வீடுகள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட போதிலும் பொருளாதார ரீதியாக பயன்பெறு நிலைமை காணப்படாமையால் தாமதடைந்திருந்தது. எதிர் காலத்தில் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | உரிய முறையில் பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (iii) | 2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து 05 வருடங்களுக்கும் ஒருமுறையும் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், தானியகம வீட்டுத் தொகுதியில் இறுதியாக 2017 மே 15 திகதி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வீடுகளை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் உரிய முறையில் பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான 265,035 மெட்ரிக் தொன் கொள்திறனை உடைய 103 களஞ்சியங்கள் காணப்பட்டதுடன், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்தக் களஞ்சியங்கள் மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு உரிய ரூபா 95,448,000 இற்கான நிலுவை வாடகை காணப்பட்டது. அவற்றில் ரூபா 42,876,740 தொகை திணைக்களம் தற்போது வாடகைக்கு வழங்கியிருந்த 23 வாடகையாளர்களிடம் பெற வேண்டிக் காணப்பட்டதுடன், ரூபா 52,571,260 தொகை வாடகைக்கு வழங்கி மீண்டும் உரித்தாக்கியிருந்த களஞ்சியங்கள் தொடர்பானவையாகும். மேலும், வாடகையாளர்கள் வாடகையை செலுத்த தவறும் சந்தர்ப்பத்தில் வாடகை உடன்படிக்கையின் படி வளவினை மீண்டும் உரித்தாக்குவதற்கான இயலுமை வாடகைக்கு வழங்கியவருக்கு காணப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக வாடகை செலுத்த தவறிய வாடகையாளர்கள் 23 பேர் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | இந்தக் களஞ்சியங்கள் அனேகமாக அரச நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட்டு நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சிற்றுண்டிச்சாலைக் கட்டிடம் 2019 ஆகஸ்ட் 15 திகதி முதல் 2022 ஆகஸ்ட் 14 திகதி வரை தனியார் கம்பனி ஒன்றிற்கு வாடகைக்கு கொடுப்பதற்காக முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளுக்கு முறையே ரூபா 131,000 தொகை, ரூபா 139,400 தொகை மற்றும் ரூபா 156,000 தொகை மாதாந்த வாடகைக்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. அதன்படி, 03 வருடங்களுக்காக ரூபா 5,116,800 இற்கான வாடகைத் தொகையொன்று பெற வேண்டியிருந்த போதிலும், 2020 திசெம்பர் 01 திகதி முதல் 2022 நவம்பர் 30 திகதி வரை மாத்திரம் ரூபா 2,966,000 இற்கான இன்வொயிஸ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றிலும் ரூபா 2,443,000 தொகை நிலுவை வாடகை என காணப்பட்டதுடன், உடன்படிக்கையில் 28 ஆவது பந்தியை மீறிய காரணத்தினால் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2022 ஒக்தோபர் 22 திகதி சிற்றுண்டிச்சாலை தொடர்பாக திணைக்களத்தினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று மேற்கொண்டு சிற்றுண்டிச்சாலைக்கு சீல் வைக்கப்பட்டிருந்தது. இதுவரை நிலுவைத் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன், சிற்றுண்டிச்சாலை வேறு தரப்பினர் ஒருவருக்கு வழங்குவதற்காக பெறுகை அலுவல்கள் ஏனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சிற்றுண்டிச்சாலையை வேறொரு தரப்பினருக்கு சாட்டுவதற்கு 2023.07.31 திகதிக்கு முன்னர் பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என. | பெறுகை நடவடிக்கை தாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரச நிதிச் சுற்றிக்கை 01/2021 இன் கீழான வழிகாட்டல் ஒன்றிற்கு இணங்க அரச உத்தியோகத்தருக்கான பீ கணக்கின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையை அறவீடு செய்வதற்கு தாபனக் கோவையில் XXIV அத்தியாயத்தின் 4.4, 4.2.4 மற்றும் 4.2.5 ஆகிய பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து மேலும் கால தாமதமாகிய கடன் மீதிகள் தொடர்பாக வழிகாட்டலின் (உ) | இறந்த பீ.கே. நிகால் அவர்களின் ஓய்வூதிய உரிமையை பெற்றுக்கொள்வதற்கு ஒருவரும் முன்வந்திருக்கவில்லை. ரூபா 154,130.31 இற்கான நிலுவை மீதிக்கு பிணையாக இருப்பது தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியமாகும். இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு தகவல் | கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மேலும் அறவிட முடியாத கடன் மீதி காணப்படின் வழிகாட்டலின் (ஊ) பந்தியின் பிரகாரம் குறிப்பிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவற்காக ஆவணங்களுடன் நிலுவை கடன் மீதியை கைவிடுவதற்காக நிதிப் பிரமாணம் 113 இன் கீழ் திறைசேரியின் பிரதிச் செயலாளர்/ திறைசேரிச் செயலாளருக்கு அனுப்புவதற்கான கோறிக்கையொன்று திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளாமல் திணைக்களத்தினால் இறந்த, ஓய்வுபெற்ற, சேவை இடைநிறுத்தப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,387,731 தொகையில் தொடர்ந்தும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்காக நட்டங்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றில் 1 – 2 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 346,500 இற்கான கடன் மீதியும் காணப்பட்டது. | அனுப்பப்பட்டுள்ளது.<br>15 வருடங்களுக்கு மிகையான கடன் மீதி காணப்படும் உத்தியோகத்தர்களின் சிலரின் தனிப்பட்ட கோப்புக்கள் கண்டடிறிய முடியாமையால் நிலுவை கடன் மீதியை கைவிடுவதற்காக நிதிப் பிரமாணம் 113 இன் கீழ் விரைவாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>எஸ். மல்வான அவர்களின் கடன் மீதி தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும், 1 – 2 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன் மீதிகள் காணப்படும் டீ.எம்.ஜீ. இந்திக அவர்களின் பிணையாளரான ஈ.ஜீ. சிரிபால தற்போது ஓய்வு பெற்றுள்ளதுடன், டீ.எம். பிரியந்த அவர்களின் பிணையாளர் இந்தத் திணைக்களத்தின் வேயங்கொட மாவட்ட உணவுக் களஞ்சியத்தின் காவலாளராக சேவையாற்றும் டப்ளியூ..ஆர்.எம்.யூ. அமரசிங்க அவர்கள் என நிருவாகப் பிரிவிலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது.<br>அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவுகள் 40(1) மற்றும் 40(2) இற்கு இணங்க திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவியிருக்கவில்லை. | பதில் கடமை அடிப்படையில் ஏனும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக்கொண்டேன். | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |